Toronto Seniors Housing Corporation


# குடியிருப்போருக்கான வரவேற்பு

## வழிகாட்டி

2025

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| 3 | எங்கள் பணியை வழிநடத்துபவை |
| 6 | உங்கள் கட்டிடம் |
| 14 | உங்கள் குத்தகை ஒப்பந்தம் |
| 20 | உங்கள் சமூகம் |
| 23 | யாரை, எப்போது தொடர்பு கொள்ள வேண்டும் |



# எங்கள் பணியை வழிநடத்துபவை

டொராண்டோ சீனியர்ஸ் ஹவுசிங்கின் குறிக்கோள், குடியிருப்பாளர்கள் தங்கள் வீடுகளிலேயே முதுமைக் காலத்தை சௌகரியமாகவும் கௌரவமான முறையிலும் கழிப்பதற்கும், அவர்களுக்குத் தேவையான சேவைகளுக்கும் திட்டங்களுக்கும் அணுகலைப் பெற்றுக் கொண்டிருப்பதற்கும், அவர்களின் சமூகத்தில் அங்கீகரிக்கப்படும் ஒரு நபராக மதிக்கப்படுவதற்கும் உதவுவது ஆகும். குடியிருப்பாளர்களுக்கு நாங்களும் சமூகத்தில் மதிக்கப்படுகிறோம் என்ற உணர்வையும் அவர்களுக்கான நல்வாழ்வையும் ஏற்படுத்தி பாதுகாப்பான, பன்முகத்தன்மையான, செயலூக்கம் நிறைந்த சமூகங்களைக் கட்டியெழுப்புவதற்கான எங்கள் தொலைநோக்கை நோக்கி நாங்கள் குடியிருப்பாளர்கள், பணியாளர்கள் மற்றும் கூட்டாளர்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கும் அவர்களுடன் ஒத்துழைப்பதற்கும் உறுதி பூண்டுள்ளோம்.

எமது இந்தப் பணிக்கு வழிகாட்டுகின்ற விடயங்கள் பற்றி மேலும் வாசித்துத் தெரிந்து கொள்வதற்கு, எங்கள் இணையத்தளத்தில் **TorontoSeniorsHousing.ca/strategic-directions/** என்ற பகுதியில் எங்களுடைய மூலோபாயச் செயன்முறைகள், பிரதானமான செயற் திறன் குறிகாட்டிகள், மற்றும் முழுமையான விளக்கத் திட்டம் ஆகியவற்றை நீங்கள் வாசித்தறியலாம். இந்த ஆவணங்கள் எதிர்வருகின்ற பல வருடங்களில் எமது முன்னேற்றத்திற்கு வழிகாட்டும் முக்கிய செயற்பாடுகள், மைல்கற்கள் மற்றும் அளவுகோல்களைப் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுகின்றன.

# கூடுதல் தகவல்களை எங்கு காண்பது

## அறிவிப்பு பலகைகள்

ஒவ்வொரு கட்டிடத்திலும் ஐந்து முக்கிய அறிவிப்புப் பலகைகள் உள்ளன. இங்கு, பின்வருவன பற்றிய தகவல்களை அறிந்து கொள்ளலாம்:

- ஊழியர்களை எவ்வாறு தொடர்பு கொள்வது
- கார்ப்பரேட் மற்றும் கட்டிடம் பற்றிய செய்திகள்
- வரவிருக்கும் நிகழ்வுகள்
- பிற பயனுள்ள அறிவிப்புகள்

இந்த அறிவிப்புப் பலகைகள் பற்றிய கூடுதல் தகவல்களை இந்த வழிகாட்டியின் இறுதிப் பகுதியில் நீங்கள் காணலாம்.








## டொராண்டோ சீனியர்ஸ் ஹவுசிங் இணையத்தளம்

டொராண்டோ சீனியர்ஸ் ஹவுசிங் பற்றிய பொதுவான தகவல்களை எங்கள் [TorontoSeniorsHousing.ca](https://TorontoSeniorsHousing.ca) இணையத்தளத்தில் நீங்கள் காணலாம். இந்த இணையத்தளத்தால் உள்ளடக்கத்தை தானாகவே பல மொழிகளில் மொழிபெயர்க்க முடியும்.



## பிற மொழிகளில் உதவி

உங்களுக்கு வேறொரு மொழியில் உதவி தேவைப்படும் பட்சத்தில், **குடியிருப்போர் ஆதரவு சேவை மையத்தை 416-945-0800** என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசியில் ஒருவர் பதிலளிக்கும் போது, நீங்கள் பேசுகின்ற மொழியை அவர்களிடம் தெரிவிக்கவும். அவர்கள் உதவிக்கு, தொலைபேசியில் ஒரு உரைபெயர்ப்பாளரை அழைக்கும் வரை காத்திருக்கவும்.

உங்கள் கட்டிடத்தில் உள்ள **மூத்தோர் சேவைகள் ஒருங்கிணைப்பாளர் (SSC)**-ஐயும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.

நீங்கள் **குடியிருப்போர் ஆதரவு சேவை மையம்**-ஐயும் தொடர்பு கொள்ளலாம், அல்லது பிரெய்லி போன்ற பிற வடிவங்களில் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு உங்கள் **மூத்தோர் சேவைகள் ஒருங்கிணைப்பாளர் (SSC)**-ஐயும் தொடர்பு கொள்ளலாம். குடியிருப்போரில், கேட்கும் திறன் மற்றும் பேச்சுக் குறைபாடுகள் உள்ளவர்களுக்காக டெலிடைப்ரைட்டர் (TTY) சாதனங்களுக்கும் குடியிருப்போர் ஆதரவு சேவை மைய தொலைபேசி எண் செயல்படும்.

## ஊழியர்களை அல்லது சமூக சேவைகளைத் தொடர்புகொள்ளுதல்

இந்த வழிகாட்டியின் இறுதிப் பகுதியில் யாரை, எப்போது தொடர்பு கொள்ள வேண்டும் என்ற பட்டியலை நீங்கள் காணலாம். உங்கள் கட்டிடத்தில் உள்ள ஊழியர்களின் தொடர்புத் தகவலைக் கண்டறிய, நீங்கள்:

- கட்டிடத்தில் உள்ள நீல நிற அறிவிப்பு பலகையை (**நீல நிறப் பலகை**) பார்க்கலாம்
- உங்கள் வரவேற்புத் தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ள "உங்கள் கட்டிட ஊழியர்கள்" எனும் பக்கத்தைப் பார்க்கலாம்
- **குடியிருப்போர் ஆதரவு சேவை மையத்தை 416-945-0800** என்ற எண்ணில் தொடர்புகொள்ளலாம்



# உங்கள் கட்டிடம்

## வீட்டிற்குக் குடியேறுதல்

உங்கள் புதிய வீட்டிற்குக் குடியேறுவதற்கு முன்பு, நீங்கள் குடியேறுவதை முன் பதிவு செய்வதற்காக **கட்டிட கண்காணிப்பாளரை** தொடர்புகொள்ளவும். **குடியிருப்போர் ஆதரவு சேவை மையத்தை**

**416-945-0800** என்ற எண்ணிலும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.

## விநியோகப் பொருட்கள்

தளபாடம் அல்லது ஒரு பொதி போன்ற விநியோகப் பொருள் உங்களுக்கு வருகிறது என்றால், உங்கள் கட்டிடத்தில் விநியோகப் பொருட்கள் எவ்வாறு செயல்படுகின்றன என்று உங்கள் **கட்டிட கண்காணிப்பாளரிடம்** கேட்டுத்

தெரிந்து கொள்ளவும்.

## சாவிகளும் ஃபாப்களும்

நீங்கள் குடியேறும் போது, உங்களுக்குப் பின்வருவனவற்றை டொராண்டோ சீனியர்ஸ் ஹவுசிங்' வழங்கும்:

- உங்கள் வீட்டிற்கான இரண்டு (2) சாவிகள்
- உங்கள் அஞ்சல் பெட்டிக்கு ஒரு (1) சாவி
- உங்கள் கட்டிடத்திற்குள் நுழைவதற்காக ஒரு (1) மின்னணு சாவி ஃபாப்

உங்கள் சாவிகளின் அல்லது ஃபாப்பின் மேலதிக பிரதிகள் தேவைப்பட்டால், அல்லது நீங்கள் அவற்றை தொலைத்து விட்டால், உங்கள் **கட்டிட கண்காணிப்பாளரை** தொடர்பு கொள்ளவும். இதற்காகக் கூடுதல் கட்டணம் அறவிடப்படும். ஒரு அவசர நிலைமையின் போது அல்லது அலுவலக நேரத்திற்குப் பிறகு, **குடியிருப்போர் ஆதரவு சேவை மையத்தை 416-945-0800** என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

உங்கள் பாதுகாப்பிற்கும் கட்டிடத்தில் உள்ள மற்றவர்களின் பாதுகாப்பிற்கும் சாவிகளும் ஃபாப்களும் முக்கியமானவை. பூட்டுகளை மாற்றவோ புது பூட்டுகளைப் போடவோ வேண்டாம். புது பூட்டுகளைப் போடுவது அல்லது பூட்டுகளை மாற்றுவது உங்கள் குத்தகை ஒப்பந்த விதிகளுக்கு எதிரானது, மேலும் இது ஒரு அவசர சூழ்நிலையில் ஆபத்தை ஏற்படுத்தலாம். நீங்கள் போட்ட ஒரு பூட்டை நாங்கள் உடைக்க வேண்டியிருக்கும் பட்சத்தில், பழுதுபார்ப்புகளுக்கு நீங்கள் பணம் செலுத்த வேண்டியிருக்கும்.

உங்கள் விருந்தினர்(களின்) நடத்தைக்கு நீங்களே பொறுப்பாவீர்கள். உங்கள் குத்தகையில் இல்லாதவர்களுக்கு உங்கள் சாவிகளின் அல்லது ஃபாப்களின் நகல்களைக் கொடுக்க வேண்டாம். இது அனைவரின் பாதுகாப்புக்கும் ஆபத்தை ஏற்படுத்துகிறது மேலும் இது உங்கள் குத்தகை விதிமுறைகளுக்கு எதிரானது.

## பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு சேவை

பழுதுபார்ப்புக்கு அல்லது ஒரு சேவையைப் பெறுவதற்கு உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், நீங்கள் பராமரிப்பு அல்லது சேவை கோரிக்கையைச் செய்ய வேண்டும்.

பராமரிப்புக் கோரிக்கைகளுக்கான உதாரணங்கள் (ஏதாவது சரிசெய்யப்பட வேண்டியிருக்கும் போது):

- கசிவுக் குழாய்கள் அல்லது குழாய் வேலை தொடர்பான பிரச்சனைகள்
- உடைந்த அல்லது சேதமடைந்த ஜன்னல்கள்
- பீடைக் கட்டுப்பாடு (பூச்சிகளுக்கு அல்லது எலிகளுக்கு)

சேவை கோரிக்கைகளுக்கான உதாரணங்கள்:

- சுகாதார, சனசமூக சேவைகளைக் கண்டறிதல்
- உங்கள் வாடகை அல்லது வருடாந்த வாடகை மீளாய்வு குறித்த கேள்விகள்
- வேறொரு மொழியில் அல்லது வடிவத்தில் தகவல்கள்
- உங்கள் மருத்துவ தேவைகளுக்காக சுலபமாக செல்லக்கூடிய வகையில் உங்கள் வீட்டை மாற்றுவது

ஒரு பராமரிப்பு அல்லது சேவைக் கோரிக்கையை மேற்கொள்வதற்கு, நீங்கள் பின்வருவனவற்றைச் செய்ய வேண்டும்:

- உங்கள் கட்டிட ஊழியர்களிடம் கதைக்கவும்
- **குடியிருப்போர் ஆதரவு சேவை மையத்தை 416-945-0800** என்ற எண்ணில் தொடர்புகொள்ளலாம்
- Support@TorontoSeniorsHousing.ca இற்கு மின்னஞ்சல் அனுப்பவும்

'குடியிருப்போர் ஆதரவு சேவை மையம்' அனைத்து அவசரமற்ற சேவை கோரிக்கைகளுக்கும் **இரண்டு (2) வேலை நாட்களுக்குள்** பதிலளிக்கிறது. உங்களுக்கு அணுகல் தொடர்பான உதவி தேவைப்பட்டால், தயவுசெய்து இதை உங்கள் கோரிக்கையின் ஒரு பகுதியாகச் சேர்க்கவும். உங்கள் வீட்டைப் பார்வையிடுவதற்கு, குறைந்தபட்சம் **24 மணித்தியாலங்களுக்கு** முன்னதாக நாங்கள் உங்களுக்கு அறிவித்தல் கொடுப்போம்.

உங்கள் கட்டிடத்தின் **கண்காணிப்பாளர்** மற்றும் **பராமரிப்பு** ஊழியர்கள் உங்களுக்குத் தேவையான ஏதேனும் **பராமரிப்புக் கோரிக்கைகளுக்கு** உதவத் தயார் நிலையில் உள்ளனர். உங்கள் கட்டிடத்தின் **மூத்தோர் சேவைகள் ஒருங்கிணைப்பாளர் (SSC)** உங்களுக்கு வேறு **ஏதேனும் சேவை கோரிக்கைகள்** அல்லது கேள்விகள் இருந்தால், அதற்கு உதவத் தயார் நிலையில் உள்ளார். நீங்கள் இந்த ஊழியர்களை தொலைபேசி, மின்னஞ்சல் வழியாக, அல்லது அவர்களின் அலுவலக நேரங்களில் நேரில் தொடர்பு

கொள்ளலாம். அவர்களின் தொடர்பு விவரங்களும் அலுவலக நேரங்களும் அவர்களின் அலுவலகங்களுக்கு வெளியேயும், உங்கள் கட்டிடத்தின் நீல நிற அறிவிப்புப் பலகையிலும் (**நீல நிறப் பலகை**) ஒட்டப்பட்டுள்ளன.

இந்த வரவேற்பு வழிகாட்டியின் இறுதிப் பகுதியில் யாரை, எப்போது தொடர்பு கொள்ள வேண்டும் என்ற பட்டியலை நீங்கள் காணலாம்.

## குப்பை, சேதனக் கழிவுகள் மற்றும் மீள்சுழற்சி

**உங்கள் கட்டிடத்தை சுத்தமாக வைத்திருக்க உதவுங்கள்:**

- குப்பையை குப்பைக் குழாயில் போடுவதற்கு முன்பு, அனைத்துக் குப்பைகளையும் சிறிய குப்பைப் பைகளில் போடவும்.
- பெரிய கறுப்புப் பைகளை வெளியில் வைக்கப்பட்டுள்ள குப்பைத் தொட்டியில் போடவும். இவற்றைக் குப்பைக் குழாயில் போடாதீர்கள், ஏனெனில் இவை குழாயில் சிக்கிக் கொள்ளும்.
- உங்கள் சுற்றுப் பகுதிகளை சுத்தமாக வைத்திருக்கவும். குப்பைகளை கட்டிடத்தின் தரையில், குப்பை அறைகளில், நடைபாதைகளில் அல்லது லிஃப்ட் அருகே வைக்காதீர்கள்.

தயவுசெய்து உங்கள் மீள்சுழற்சி செய்ய முடியுமான மற்றும் உரக் கழிவுகளை எறிவதற்காக குப்பைக் குழாயைப் பயன்படுத்த வேண்டாம். மீள்சுழற்சி செய்ய முடியுமான மற்றும் உரக் கழிவுகளை உங்கள் கட்டிடத்தில் எங்கு போட வேண்டும் என்பதை தெரிந்து கொள்வதற்கு, உங்கள் வரவேற்புத் தொகுப்பில் உள்ள "உங்கள் கட்டிடத்தை சுத்தமாக வைத்திருக்க உதவுங்கள்" என்ற பக்கத்தைப் பார்க்கவும்.

உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால், உங்கள் கட்டிடத்தில் உள்ள டொராண்டோ சீனியர்ஸ் ஹவுசிங் ஊழியர் ஒருவரிடம் கதைக்கவும்.

## செல்லப்பிராணிகள்

உங்கள் செல்லப்பிராணி உங்களுக்கு எவ்வளவு முக்கியமானது என்பதை நாங்கள் அறிவோம், மேலும் உங்கள் செல்லப்பிராணிகளுக்கு ஏற்ற சூழலை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறோம். உங்கள் சமூகத்தின் மீது அக்கறையுடன் இருக்கும் அதே வேளையில், உங்கள் செல்லப்பிராணியை எப்படி மகிழ்ச்சியாக வளர்க்கலாம் என்பதற்கான வழிமுறைகள் இங்கே உள்ளன.

- உங்கள் வீட்டை விட்டு வெளியே செல்லும் போது, உங்கள் செல்லப்பிராணிகளை எப்போதும் கட்டியே வைத்திருக்கவும்
- செல்லப்பிராணிகளை மேல்மாடத்தில் தனியாக ஒருபோதும் விடாதீர்கள்
- உங்கள் செல்லப்பிராணியின் கழிவுகளை எப்போதும் சுத்தம் செய்யவும்
- செல்லப்பிராணிக்கான கழிவுப் பைகளை எப்போதும் எடுத்துச் செல்லவும்
- செல்லப்பிராணியின் கழிவுகளை இரட்டைப் பையில் வைத்துக் குப்பையில் போடவும்

உங்கள் ஒத்துழைப்பிற்கு நன்றி. மேலதிக தகவல்களுக்கு, Toronto.ca என்ற இணையதளத்திற்குச் சென்று "விலங்குகள் மற்றும் செல்லப்பிராணிகள்" என்று தேடவும். ஒரு விலங்கு தொடர்பான பிரச்சனையைத் தெரிவிப்பதற்கு, தயவுசெய்து **சிட்டி ஆஃப் டொரோண்டோவை 416-338-7297** என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

# தொலைபேசி, கேபிள் மற்றும் இணையம்

உங்கள் வாடகையில் தொலைபேசி, கேபிள் மற்றும் இணையத்திற்கான கட்டணங்கள் சேர்க்கப்படவில்லை. டொராண்டோவில் இந்த சேவைகளை வழங்கும் எந்த நிறுவனத்தையும் நீங்கள் தெரிவு செய்யலாம். 'ரோஜர்ஸ்' நிறுவனம் சமூக வீட்டுவசதிகளில் குடியிருக்கும் சிலருக்கு தள்ளுபடி திட்டத்தை வழங்குகிறது. இந்தத் திட்டம் 'கனெக்டட் ஃபார் சக்சஸ்' (rogers.com/connected-for-success) என்று அழைக்கப்படுகிறது.

தயவுசெய்து திங்கள் முதல் வெள்ளி வரை வேலை நேரங்களில் தொலைபேசி, கேபிள் அல்லது இணைய சேவை வழங்கும் நிறுவனங்கள் உங்கள் வீட்டுக்கு வருவதை முன்பதிவு செய்யவும். அந்த வகையில், சேவை ஊழியர் கட்டிடத்தின் சில பகுதிகளுக்குள் நுழைய வேண்டியிருந்தால், அதற்கு உங்கள் **கட்டிட கண்காணிப்பாளர்** உதவுவார்.

# நுகர்பயன்கள், வெப்பமாக்கி மற்றும் குளிரூட்டி

## நுகர்பயன்கள்

உங்கள் **மூத்தோர் சேவைகள் ஒருங்கிணைப்பாளர் (SSC)** எந்தெந்த நுகர்பயன் சேவைகளுக்கு நீங்கள் நேரடியாகப் பணம் செலுத்த வேண்டும் மற்றும் எவை உங்கள் வாடகையில் சேர்க்கப்பட்டுள்ளன என்பதை உங்களுக்குத் தெரிவிப்பார்.

நீங்கள் வருமானத்தை அடிப்படையாகக் கொண்ட வாடகை (RGI) செலுத்துகிறீர்கள் என்றால், உங்கள் வீட்டின் அளவைப் பொறுத்து நுகர்பயன் வசதிகளுக்காக நீங்கள் செலுத்தும் தொகை மாறுபடும்.

## வெப்பமாக்கி

டொராண்டோ நகரத்தின் சட்டப்படி, செப்டம்பர் 15 முதல் ஜூன் 1 வரை அடுக்குமாடி குடியிருப்புகளின் அறை வெப்பநிலை குறைந்தபட்சம் 21 பாகை செல்சியஸ் ஆக இருக்க வேண்டும். நாங்கள் வெப்பமாக்கியை இயக்கும் போதும் அணைக்கும் போதும் இந்தச் சட்டத்தைப் பின்பற்றுகிறோம்.

சட்டத்தின் படி, அதிகபட்ச வெப்பநிலை என்று எதுவும் இல்லை. அதிக வெப்பமான காலங்களில் நிலைமைகளை நாங்கள் கண்காணிக்கிறோம். உங்கள் வீட்டிற்குள் நிலவுகின்ற வெப்பநிலை குறித்து உங்களுக்குப் பிரச்சனை இருந்தால், தயவுசெய்து **குடியிருப்போர் ஆதரவு சேவை மையத்தை 416-945-0800** என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

## குளிரூட்டிகள்

ஜன்னல் வழி பொருத்துகின்ற குளிரூட்டி (AC) அலகுகள் ஆபத்தானவை என்பதால் அவை அனுமதிக்கப்படுவதில்லை. குடியிருப்பவர்கள் தரையில் வைக்கப்படும் AC அலகுகளை வாங்கிப் பயன்படுத்தலாம். வெப்பமான காலநிலையில், பொது நூலகம் அல்லது ஷாப்பிங் மால் போன்ற குளிர் தருகின்ற இடங்களுக்கு நீங்கள் செல்லலாம். அருகிலுள்ள குளிர்ச்சியான ஒரு இடத்தைக் கண்டறிவதற்கு, **bit.ly/43FwbbK** ஐப் பார்வையிடுங்கள். இது பற்றிய தகவல்களை உங்கள் கட்டிடத்தில் உள்ள நீல நிற அறிவிப்புப் பலகையிலும் (**நீல நிறப் பலகை**) நீங்கள் காணலாம்.

# தீப் பாதுகாப்பு

தீப்பிடிப்பதைத் தடுக்க உதவுவதற்கும், வெளியேறும் பாதைகளைத் தடைகள் ஏதுமின்றி வைத்திருப்பதற்கும் குடியிருப்பவர்களே பொறுப்பாவார்கள். உங்கள் வீட்டையும் கட்டிடத்தையும் பாதுகாப்பாக வைத்திருப்பதற்காகத் தீப் பாதுகாப்பு குறிப்புகள் குறித்து தெரிந்து கொள்வதற்கு, வரவேற்பு அறையில் உள்ள செய்தி அறிவிப்புப் பலகை (**அறிவிப்பு பலகை 1**) ஐப் பார்க்கவும். தீப் பாதுகாப்பு உபகரணங்களைத் தொடவோ சேதப்படுத்தவோ வேண்டாம். இது ஆபத்தானதும் சட்டத்திற்குப் புறம்பானதும் ஆகும்.

உங்கள் வீட்டில் ஒட்சிசன் இருக்குமானால், ஒன்ராறியோவின் தீப் பாதுகாப்பு வழிமுறைகளை பின்பற்றவும். ஒட்சிசன், தீயை அதிகமாகவும் வேகமாகவும் பரவச் செய்யும். உங்கள் ஒட்சிசனைப் பாதுகாப்பாகவும், கசியாமல் இருக்கும் வண்ணமும் சேமித்து வைப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும். தீப்பிடித்தால், **உடனடியாக 911ஐ அழைக்கவும்**.

# புகைபிடித்தல் மற்றும் மின் சிகரெட் புகைத்தல்

புகை இல்லாத ஒன்ராறியோ சட்டத்தின் கீழ், நீங்கள் பின்வரும் இடங்களில் புகைபிடிக்கவோ அல்லது மின் சிகரெட் புகைக்கவோ முடியாது:

- படிக்கட்டுகள், நடைபாதைகள் அல்லது கட்டிடத்தின் பிற பொதுவான பகுதிகள்
- அனைத்து நுழைவுப் பாதைகள் மற்றும் வெளியேறும் இடங்களில் இருந்து 9 மீட்டரினுள்

பொதுவான பகுதிகளில் புகைபிடிப்பது மற்றும்/அல்லது மின் சிகரெட் பிடிப்பது, தீ எச்சரிக்கை அமைப்பைச் செயல்படுத்தி தவறான தீ எச்சரிக்கையை ஏற்படுத்தும். தயவுசெய்து கட்டிடத்திற்கு வெளியே, கட்டிடத்திலிருந்து தள்ளி புகைபிடிக்கவும். உங்கள் பாதுகாப்பிற்காக, டொராண்டோ சீனியர்ஸ் ஹவுசிங் ஒவ்வொரு மாதமும் உங்கள் கட்டிடத்தின் பொதுவான பகுதிகளில் தீ எச்சரிக்கை மற்றும் பிற உயிர் பாதுகாப்பு அமைப்புகளை சோதிக்கிறது.

# மாடம் மற்றும் ஜன்னல் பாதுகாப்பு

உங்கள் மாடங்களையும் ஜன்னல்களையும் பாதுகாப்பாகப் பயன்படுத்தி மகிழுங்கள்.

## மாடப் பாதுகாப்பு:

- உங்கள் மாடத்தில் குழந்தைகளையோ செல்லப்பிராணிகளையோ ஒருபோதும் தனியாக விட்டுவிடாதீர்கள்.
- உங்கள் மாடத்தில் பொருட்களை வைக்கவோ அல்லது BBQ-க்களைப் பயன்படுத்தவோ வேண்டாம் - இது பாதுகாப்பானது அல்ல, மேலும் தீ விபத்துக்குக் காரணமாகக் கூடும்.
- உங்கள் துணிகளை உலர்த்தும் சட்டத்தில் இட்டு வீட்டிற்குள்ளே உலர்த்துங்கள்.
- மாடத்தில் இருந்து குப்பைகளை அல்லது சிகரெட் துண்டுகளை எறியாதீர்கள்.
- பறவைகளுக்கு உணவளிக்கும் சாதனங்கள் அனுமதிக்கப்படுவதில்லை.
- உங்கள் மாடத்தை சுத்தம் செய்யும் போது அல்லது உங்கள் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றும் போது கீழ்பகுதியில் உள்ள உங்கள் அண்டை வீட்டாரைக் கவனத்தில் கொள்ளவும்.

## ஜன்னல் பாதுகாப்பு:

- ஜன்னல் வழி பொருத்துகின்ற குளிரூட்டி(AC) அலகுகள் பாதுகாப்பிற்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடியவை என்பதால் அவை அனுமதிக்கப்படுவதில்லை.
- தயவுசெய்து ஜன்னல் பூட்டுகளை அல்லது திரைகளை சேதப்படுத்தவோ, சரிசெய்யவோ அல்லது அகற்றவோ வேண்டாம். ஜன்னல் பூட்டுகள் உங்களைப் பாதுகாப்பாக வைத்திருக்கின்றன, மேலும் மனிதர்களையும் செல்லப்பிராணிகளையும் விழாமல் பாதுகாக்கின்றன.
- ஜன்னல் திரைகள் பூச்சிகளை வரவிடாமல் தடுக்கின்றன, ஆனால் அவற்றால் செல்லப்பிராணிகள் விழுவதைத் தடுக்க முடியாது.

அனைவரையும்பாதுகாப்பாகவைத்திருக்கஉதவுங்கள்.யாரேனும்ஒருவர்அவரது மாடத்தைபாதுகாப்பற்றமுறையில்பயன்படுத்தினாலோ,அல்லதுமாடம்,ஜன்னல் அல்லது திரையை சரிசெய்ய வேண்டிய அவசியம் இருக்கும் பட்சத்திலோ:

- உங்கள் **கட்டிட கண்காணிப்பாளருடன்** பேசவும்
- **குடியிருப்போர் ஆதரவு சேவை மையத்தை 416-945-0800** என்ற எண்ணில் தொடர்புகொள்ளலாம்
- [Support@TorontoSeniorsHousing.ca](mailto:Support@TorontoSeniorsHousing.ca) இற்கு மின்னஞ்சல் அனுப்பவும்

## விருந்தினர் மற்றும் வாகனத் தரிப்பிடம் பற்றிய தகவல்கள்

குடியிருப்போர் அனைவருக்கும் கட்டணம் செலுத்தப்பட்ட வாகனத் தரிப்பிடம் உள்ளது, ஆனால் அனைத்துக் கட்டிடங்களிலும் கிடைக்கக் கூடிய வாகனத் தரிப்பிடம் இல்லை. குடியிருப்போர் வாகனத் தரிப்பு வசதியைப் பெறத் தேவையான தகுதிகள்:

- உங்கள் வாகனம் ஓட்டக்கூடிய நிலையில் இருக்க வேண்டும்.
- வாகன உரிமை புதுப்பித்த நிலையில் இருக்க வேண்டும்.
- டொராண்டோ சீனியர்ஸ் ஹவுசிங்கில் உள்ள உங்கள் வீட்டில் வாடகைப் பிரச்சனைகள் எதுவும் இருக்கக் கூடாது.
- உங்கள் குத்தகை ஒப்பந்தத்தில் உள்ள ஒருவரின் பெயரில் வாகனத்தின் உரிமை பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். அந்த நபர் வசிக்கும் டொராண்டோ சீனியர்ஸ் ஹவுசிங் யூனிட்டிலே அவரது முகவரியும் இருக்க வேண்டும்.

வாகனத்தரிப்பிடக்கட்டணங்கள்மற்றும்பதிவுசெய்வதற்கானவழிமுறைகளுக்கு, TorontoSeniorsHousing.ca/parking ஐப் பார்வையிடவும்

விருந்தினர்களுக்கு விருந்தினர் வாகனத் தரிப்பு அனுமதிகள் உள்ளன. நீங்கள் இவற்றை உங்கள் **மூத்தோர் சேவைகள் ஒருங்கிணைப்பாளர் (SSC)** மூலம் அல்லது **கட்டிடக் கண்காணிப்பாளர்** மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

## பீடைகளைத் தடுத்தல்

டொராண்டோ சீனியர்ஸ் ஹவுசிங்கில், உங்கள் கட்டிடத்தை பீடைகள் இல்லாமல் வைத்திருக்க நாங்கள் கடுமையாக உழைக்கிறோம். ஆனால் சில நேரங்களில் கரப்பான் பூச்சிகள், எலிகள், மூட்டைப்பூச்சிகள் மற்றும் பிற பீடைகள் உள்ளே வரக்கூடும்.

உங்கள்வீட்டில் பூச்சிகள் இருந்தால், டொராண்டோ சீனியர்ஸ் ஹவுசிங் தேவையான பீடைக் கட்டுப்பாட்டு சேவையை ஏற்பாடு செய்து பணம் செலுத்திவிடும். இதற்குத் தேவையான சேவைக்கு ஏற்பாடு செய்ய:

- உங்கள் **கட்டிட கண்காணிப்பாளருடன்** பேசவும்
- **குடியிருப்போர் ஆதரவு சேவை மையத்தை 416-945-0800** என்ற எண்ணில் தொடர்புகொள்ளலாம்
- **Support@TorontoSeniorsHousing.ca** இற்கு மின்னஞ்சல் அனுப்பவும்

குடியிருப்போர் தங்களுடைய வாடகை வீட்டை சுத்தமாக வைத்திருக்கவும், எதிர்காலத்தில் பீடைகள் பெருகுவதை தடுக்கும் நோக்கத்திலும் பராமரிப்பு

பிரச்சனைகளை '**குடியிருப்போர் ஆதரவு சேவை மையத்துக்கு**' தெரிவிப்பதற்கும் பொறுப்பாவார்கள்.

**உங்கள் வீட்டையும் கட்டிடத்தையும் பீடைகள் இல்லாமல் வைத்திருக்க உதவுங்கள்:**

- உங்கள் வீட்டை சுத்தமாகவும், குப்பைகள் இல்லாமல் வைத்திருக்கவும்.
- புறாக்கள், அணில்கள் அல்லது தெரு விலங்குகளுக்கு உணவளிக்க வேண்டாம். அவை மற்ற பீடைகளை ஈர்க்கக்கூடும்.
- மற்றவர்கள் தூக்கி எறிந்த தளபாடங்களை எடுத்துச் செல்லாதீர்கள் - அதில் பீடைகள் இருக்கலாம்.
- நடைபாதைகளையும் குப்பைக் குழாய் அறைகளின் தரைகளையும் தூய்மையாகவும் குப்பைகள் இல்லாமலும் வைத்திருக்கவும்.
- உங்கள் வீட்டில் பீடைகளை ஈர்க்கும் வகையில் சேதமிருந்தாலோ அல்லது பழுதுபார்க்கும் பணி ஏதேனும் இருந்தாலோ, அவற்றைத் தெரிவிக்கவும்.

## அணுகல்தன்மை

டொராண்டோ சீனியர்ஸ் ஹவுசிங், மாற்றுத்திறனாளி குடியிருப்போர்களை ஆதரிக்கிறது மற்றும் அனைவருக்குமான அணுகலை மேம்படுத்துவதற்காக செயல்படுகிறது. அனைத்து சிரேஷ்ட குடிமக்களும் பாதுகாப்பாக வாழ்வதையும், சமூக வாழ்வில் பங்கேற்பதையும் நாங்கள் விரும்புகிறோம். எங்கள் 'அணுகல் வசதி திட்டம்', மாற்றுத்திறனாளி குடியிருப்போர்கள் தங்களின் வீடு அல்லது பொதுப் பகுதிகளில் தேவையான மாற்றங்களை செய்ய ஊழியர்களுடன் இணைந்து செயல்பட உதவுகிறது.

உங்கள் வீட்டை அல்லது கட்டிடத்தை மேலும் அணுகக்கூடியதாக்குவதற்கு மாற்றங்கள் தேவைப்படும் பட்சத்தில்:

- உங்கள் **மூத்தோர் சேவைகள் ஒருங்கிணைப்பாளரிடம் (SSC)** பேசவும்
- **குடியிருப்போர் ஆதரவு சேவை மையத்தை 416-945-0800** என்ற எண்ணில் தொடர்புகொள்ளலாம்
- **Support@TorontoSeniorsHousing.ca** இற்கு மின்னஞ்சல் அனுப்பவும்

டொராண்டோ ஹவுசிங்கில் உள்ள 'பொறுப்பான தனிப்பட்ட அணுகுமுறை' (R-PATH) குழு, "உங்களுக்கான அணுகல் வசதிகள்" என்ற பயனுள்ள வழிகாட்டிக் கையேட்டை உருவாக்கி, இந்த செயல்முறையை விளக்குவதற்கு உதவியுள்ளது.

கையேட்டின் பிரதியை **மூத்தோர் சேவைகள் ஒருங்கிணைப்பாளரிடமிருந்து (SSC)** பெறலாம், அல்லது **TorontoSeniorsHousing.ca/accessibility-program** ஐப் பார்வையிடவும்

# உங்கள் குத்தகை ஒப்பந்தம்

## உங்கள் வாடகையை செலுத்துதல்

**உங்கள் வாடகை ஒவ்வொரு மாதமும் முதல் நாளில் செலுத்தப்பட வேண்டும்.**

டொராண்டோ சீனியர்ஸ் ஹவுசிங்கே உங்கள் வீட்டின் உரிமையாளர் ஆவார், இவர்களே உங்கள் வாடகையை கணக்கிடுகிறார்கள். இந்தக் கட்டிடங்களுக்குச் சொந்தக்காரர்**டொராண்டோ கம்யூனிட்டி ஹவுசிங் கார்ப்பரேஷன்** ஆகும், அனைத்து வாடகைத் தொகையும் அவர்களுக்கே செலுத்தப்படுகின்றன.

**நீங்கள் இந்த முறைகளில் வாடகையை செலுத்தலாம்:**



- முன் அனுமதி அளிக்கப்பட்ட கட்டணங்கள்
- காசோலைகள்
- பண அனுப்பல் ஆணைகள்
- உங்கள் உள்ளூர் வங்கிக் கிளையில் பணம் செலுத்துதல்
- டெபிட் கார்டு
- ஆன்லைன் அல்லது தொலைபேசி வங்கி

## உங்கள் குத்தகை ஒப்பந்தத்தில் உள்ள மாற்றங்களைப் பற்றிப் புகாரளித்தல்

ஒரு வருமானத்தை அடிப்படையாகக் கொண்ட குடியிருப்போர் (RGI) ஆக, உங்கள் வாடகை உதவியைத் தொடர்ந்து பெற, குறித்த சில மாற்றங்களைப் பற்றி நீங்கள் எங்களிடம் தெரிவிக்க வேண்டும். மாற்றம் ஏற்பட்ட **30 நாட்களுக்குள் மூத்தோர் சேவைகள் ஒருங்கிணைப்பாளரிடம் (SSC)** பின்வரும் மாற்றங்களைத் தெரிவிக்கவும்:

- உங்கள் வருமான வரி அறிக்கை மறுபரிசீலனை செய்யப்பட்டுள்ளது அல்லது மாற்றப்பட்டுள்ளது
- உங்கள் குத்தகை ஒப்பந்தத்தில் இல்லாதவர்கள் உங்கள் வீட்டில் வசிக்கிறார்கள்
- உங்கள் வருமானத்தில் ஏற்படும் மாற்றங்கள் (உதாரணமாக, வேலையிலிருந்து பெறும் வருமானத்திலிருந்து ஓய்வூதியமாக மாறுதல்)
- உங்கள் வீட்டிலிருந்து திட்டமிடப்பட்ட மற்றும் திட்டமிடப்படாத வரவின்மைகள் (நீங்கள் **12 மாதங்களுக்குள் மொத்தமாக 90 நாட்களுக்கு மேல் உங்கள் வீட்டை விட்டு வெளியே இருந்தால்**, உங்கள் RGI மானியத்தை நீங்கள் இழக்க நேரிடும்)

# வருமானத்தை அடிப்படையாகக் கொண்ட வாடகை (RGI) வருடாந்த வாடகை மீளாய்வு

நீங்கள் வருமானத்தை அடிப்படையாகக் கொண்ட வாடகை (RGI) திட்டத்தில் இருந்தால், நீங்கள் வருடாந்த வாடகை மீளாய்வை நிறைவு செய்ய வேண்டும்.

- வருடாந்த வாடகை மீளாய்வு பேக்கேஜை தேவைப்படும் தேதிக்கு முன்னதாகவே கனடா அஞ்சல் மூலமாக நீங்கள் பெற்றுவிடுவீர்கள்.
- இந்தப் பேக்கேஜைப் பூர்த்தி செய்து, உங்கள் வருமானச் சான்றுகளுடன் (உங்கள் வருமான வரி அறிக்கை – வரி கணக்கீட்டு அறிவிப்பு அல்லது வருமானச் சான்று) பணியாளர்களிடம் வழங்கவும்.
- தேவைப்படும் பட்சத்தில், உங்கள் **மூத்தோர் சேவைகள் ஒருங்கிணைப்பாளர் (SSC)** உங்கள் வருடாந்த வாடகை மீளாய்வை நிறைவு செய்ய உதவுவார்.

# வருடாந்த வீட்டுச் சோதிப்புகள்

சட்டப்படி, நாங்கள் வருடம் தோறும் வீடுகளை சோதனை செய்ய வேண்டும். இந்த சோதிப்புகள் ஜூலை முதல் டிசம்பர் வரை நடைபெறும்.

இந்த சோதிப்புகள் உங்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க உதவும். பாதுகாப்பற்ற நிலைமைகள் அல்லது சேதம் போன்ற உங்கள் வீட்டில் உள்ள ஏதேனும் பிரச்சனைகளைக் கண்டறிய இவை உதவுகின்றன. உங்கள் கட்டிடத்திலும் சமூகத்திலும் ஒட்டுமொத்த மேம்பாடுகளைச் செய்வதற்கும் இவை உதவுகின்றன. புகையைக் கண்டறியும் கருவி போன்ற அனைத்து தீப் பாதுகாப்பு அமைப்புகளும் சரியாக வேலை செய்கிறதா என்பதையும் நாங்கள் சோதிக்கிறோம். உங்கள் வீட்டைப் பார்வையிடுவதற்கு **24 மணித்தியாலங்களுக்கு** முன்பு நாங்கள் உங்களுக்குத் தெரிவிப்போம்.

வீட்டுச் சோதிப்புகள் பற்றி மேலும் தெரிந்து கொள்வதற்கு, **TorontoSeniorsHousing.ca/your-unit/ ஐப் பார்வையிடவும்**

# மரியாதைக்குரிய நடத்தை

அனைத்துக் குடியிருப்போர்களும் மதிக்கப்படத்தக்க, மரியாதையுடன் வாழுகிற சூழலை வழங்க டொராண்டோ சீனியர்ஸ் ஹவுசிங் முழுமையாக உறுதிபூண்டுள்ளது. நாங்கள் ஒன்ராறியோ மனித உரிமை விதிக்கோவை (விதிக்கோவை), மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான ஒன்ராறியோ அணுகல் சட்டத்தையும் (AODA) பின்பற்றுகிறோம்.

**பின்வரும் எந்தவிதமான செயலையும் நாங்கள் பொறுத்துக்கொள்ள மாட்டோம்:**

- பாரபட்சம் காட்டுதல்
- தொல்லைப்படுத்தல்
- வெறுப்பைத் தூண்டும் செயற்பாடு

இந்த விதிக்கோவையின் கீழ், அனைவரும் நியாயமாகவும் மரியாதையுடனும் நடத்தப்பட வேண்டும் என்ற உரிமையை கொண்டுள்ளனர். இதன் பொருள், சிரேஷ்டமானவர்களின் தேவைகளுக்கு ஆதரவான சூழலை உருவாக்குவதன் மூலம் நாங்கள் குடியிருப்போர்களின் மனித உரிமைகளை ஊக்குவித்து மதிப்போம் என்பதாகும். குடியிருப்போர்களின் பின்புலத்தைக் கருத்தில் கொள்ளாமல், எங்கள் அனைத்து இடங்களும் பாதுகாப்பாக இருப்பதையும் நாங்கள் உறுதி செய்வோம்.

TorontoSeniorsHousing.ca/policies என்ற எங்கள் இணையதளத்தில் **குடியிருப்போருக்கான மனித உரிமைகளின் கொள்கைகளை**முழுமையாகப் வாசிக்குமாறு நாங்கள் உங்களை ஊக்குவிக்கிறோம்

இந்தக் கொள்கையின் கீழ், அனைத்துக் குடியிருப்போர்களும் ஒருவருக்கொருவர் மரியாதையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வேறொரு குடியிருப்பாளர், ஊழியர் அல்லது TSHC விற்பனையாளரால் தங்கள் மனித உரிமைகள் எதிர்மறையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக உணரும் குடியிருப்போர்கள், TSHC-க்கு முறையான புகார் அளிக்கலாம்:

- இந்த முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புதல் **Solutions@TorontoSeniorsHousing.ca**
- **416-945-0888** என்ற எண்ணை தொடர்பு கொள்ளுதல்
- வழிகாட்டுதலுக்காக, உங்கள் **மூத்தோர் சேவைகள் ஒருங்கிணைப்பாளரிடம் (SSC)** பேசுதல்

## கொள்கைகள் மற்றும் நடைமுறைகள்

நமது சமூகங்களை மேலும் சிறப்பாக்க டொராண்டோ சீனியர்ஸ் ஹவுசிங்கில் பல கொள்கைகளும் நடைமுறைகளும் உள்ளன. உங்கள் குத்தகையைப் பாதிக்கக்கூடிய கொள்கைகள் உட்பட எங்கள் கொள்கைகளைப் பற்றி மேலும் தெரிந்து கொள்வதற்கு, தயவுசெய்து இந்த இணையதளத்தைப் பார்வையிடவும் **TorontoSeniorsHousing.ca/policies**

## புகார் அளித்தல்

உங்களுக்கு கட்டிட ஊழியர்களை அல்லது குடியிருப்போர் ஆதரவு சேவை மையத்தை அணுக முடியவில்லை என்றால், அல்லது உங்கள் பராமரிப்பு

அல்லது சேவை கோரிக்கையைப் பற்றிய போதிய தகவல்கள் கிடைக்கவில்லை என்றால், உங்கள் புகாரைப் பதிவு செய்ய, **416-945-0888** என்ற எண்ணில் அல்லது

**Solutions@TorontoSeniorsHousing.ca மின்னஞ்சலில் தீர்வு வழங்கும் குழுவை** தொடர்பு கொள்ளலாம்

உங்கள் புகாருக்கு உதவ தீர்வு வழங்கும் குழு **இரண்டு (2) வேலை நாட்களில்** உங்களைத் தொடர்பு கொள்ளும். அவர்களின் முடிவே இறுதியானது. அவர்களின் முடிவில் நீங்கள் உடன்படவில்லை என்றால் அல்லது உங்களுக்குக் கூடுதல் உதவி தேவைப்பட்டால், நீங்கள் **Ombudsman@Toronto.ca** என்ற மின்னஞ்சல் முகவரியில் குறைகேள் அதிகாரியை (Ombudsman) தொடர்பு கொள்ளலாம்.

சேவை கோரிக்கைகள் மற்றும் புகார்கள் பற்றி மேலும் தெரிந்து கொள்வதற்கு, தயவுசெய்து இந்த இணையதளத்தைப் பார்வையிடவும் **TorontoSeniorsHousing.ca/service-requests-and-complaints**

## 65 வயதாகுதல்

நீங்களோ அல்லது உங்கள் குடும்ப உறுப்பினரோ 65 வயதை எட்டினால், இது உங்கள் குடும்பத்தின் வருமானத்தையும், ஒவ்வொரு மாதமும் நீங்கள் செலுத்தும் வருமானத்தை அடிப்படையாகக் கொண்ட வாடகைத் (RGI) தொகையையும் மாற்றக்கூடும். நீங்கள் புதிய அல்லது வேறுபட்ட சலுகைகளுக்கும் தகுதி பெறலாம்.

நீங்கள் ஓய்வூதியம் மற்றும்/அல்லது முதியோர் பாதுகாப்பைப் பெறத் தொடங்கினால், உங்கள் வருமானத்தில் ஏற்படும் மாற்றங்கள் குறித்து **30 நாட்களுக்குள்** டொராண்டோ சீனியர்ஸ் ஹவுசிங்கிடம் தெரிவிக்க வேண்டும். நீங்கள் 65 வயதை அடைவதற்கு முன்பு, கூடுதல் தகவல்களுக்காக உங்கள் **மூத்தோர் சேவைகள் ஒருங்கிணைப்பாளரை (SSC)** தொடர்பு கொள்ளவும்.

## வரிச் சலுகைகள் மற்றும் பலன்கள்

வருமானத்தை அடிப்படையாகக் கொண்ட வாடகை (RGI) திட்டத்தில் நீங்கள் இருந்தால், ஒவ்வொரு ஆண்டும் வரிகளை தாக்கல் செய்ய வேண்டும், மேலும் உங்கள் வரி கணக்கீட்டு அறிவிப்பின் (NOA) நகலை எங்களுக்கு வழங்க வேண்டும்.

உங்கள் வரிகளைத் தாக்கல் செய்யும் போது, மூத்த குடிமக்களுக்கான வரிச் சலுகைகள் மற்றும் பலன்களுக்கு நீங்கள் தகுதி பெறலாம். நீங்கள் எந்த வரிச் சலுகைகள் மற்றும் பலன்களைப் பெறலாம் என்பதைக் கண்டறிய, ஒரு வரி ஆலோசனை நிபுணர் அல்லது கணக்காளரிடம் பேசுவதற்கு நாங்கள் பரிந்துரைக்கிறோம்.

சொத்துவரி விலக்குகள் மற்றும் இலவச வரி ஆலோசனை முகாம்கள் பற்றிய கூடுதல் தகவல்களுக்கு, தயவுசெய்து கீழ்காணும் இணையதளத்திற்குச் செல்லவும் **TorontoSeniorsHousing.ca/property-tax-exemptions/**

# அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

## நான் வேறு ஒரு வீட்டுக்கு அல்லது கட்டிடத்திற்கு எப்படி இடம்பெயர்வது?

நீங்கள் வேறு ஒரு வீட்டிற்கு அல்லது டொராண்டோ சீனியர்ஸ் ஹவுசிங் கட்டிடத்திற்கு குடிபெயர விரும்பினால், டொரோண்டோ நகரத்தின் (வீட்டுவசதிக்கான அணுகல்) மையப்படுத்தப்பட்ட காத்திருப்புப் பட்டியலில் புதிய விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும். கூடுதல் தகவல்களை இங்கே காணலாம் **bit.ly/3AZPzV9**

சில குடியிருப்போர் டொராண்டோ சீனியர்ஸ் ஹவுசிங்கிற்குள் முன்னுரிமை பிரிவின் கீழ் குடிபெயர தகுதி பெறலாம். நீங்கள் தகுதி பெற்றால், மையப்படுத்தப்பட்ட காத்திருப்புப் பட்டியலில் சேர வேண்டியதில்லை. கூடுதல் தகவல்களுக்கு, உங்கள் **மூத்தோர் சேவைகள் ஒருங்கிணைப்பாளருடன் (SSC)** பேசவும் அல்லது இந்த இணையதளத்தைப் பார்வையிடவும் **TorontoSeniorsHousing.ca/request-a-transfer/**

## RGI உதவியை இழக்காமல், நான் எனது வீட்டிலிருந்து எத்தனை நாட்கள் வெளியில் இருக்கலாம்?

உங்கள் வீட்டில் உள்ள அனைவரும் தொடர்ச்சியாக 90 நாட்களுக்கு மேல் அல்லது **பன்னிரண்டு மாத காலத்தில் மொத்தம் 90 நாட்களுக்கு மேல்** வெளியே தங்கியிருந்தால் RGI உதவிக்குத் தகுதி பெற மாட்டீர்கள். ஒரு சில விதிவிலக்குகள் உள்ளன. கூடுதல் தகவல்களுக்கு, உங்கள் **மூத்தோர் சேவைகள் ஒருங்கிணைப்பாளருடன் (SSC)** பேசவும் அல்லது இந்த இணையதளத்தைப் பார்வையிடவும் **TorontoSeniorsHousing.ca/absences-from-unit/**

## எனக்கு உதவி தேவைப்பட்டால், ஒரு குடும்ப உறுப்பினரை என்னுடன் வைத்துக் கொள்ளலாமா?

ஆம். உங்கள் குத்தகை ஒப்பந்தத்தில் குடும்ப உறுப்பினரை பராமரிப்பாளராக சேர்க்க நீங்கள் கோரலாம். இதைச் செய்ய, உங்கள் **மூத்தோர் சேவைகள் ஒருங்கிணைப்பாளரிடம் (SSC)** பேசி, ஒரு பராமரிப்பாளர் சரிபார்ப்புப் படிவத்தைப் பெற்று அதைப் பூர்த்தி செய்யவும். குடும்ப உறுப்பினர் குடிவந்த **30 நாட்களுக்குள்** உங்கள் யூனிட்டில் யார் வசிக்கிறார்கள் என்பதில் ஏற்பட்ட மாற்றத்தைப் பற்றி நீங்கள் தெரிவிக்க வேண்டும். இது உங்கள் RGI வாடகையைப் பாதிக்கலாம்.

### எனது வீட்டை நான் மற்றொருவருக்கு குத்தகைக்கு விடலாமா அல்லது குறுகிய காலத்திற்கு வாடகைக்கு விடலாமா?

இல்லை. உங்கள் வீட்டை மற்றொருவருக்கு குத்தகைக்கு விடவோ அல்லது குறுகிய காலத்திற்கு வாடகைக்கு விடவோ முடியாது. இதில் வாகனத் தரிப்பு இடங்களும் அடங்கும். இது உங்கள் குத்தகை ஒப்பந்தத்திற்கு எதிரானது ஆகும், மேலும் உங்கள் RGI மானியத்தை இதனால் இழக்க நேரிடலாம்.

### விருந்தினர்கள் என்னுடன் எவ்வளவு நாட்கள் வரை தங்கலாம்?

ஒரு விருந்தினரை உங்களுடன் தங்க அனுமதிக்கலாம் — ஆனால் அதிகபட்சமாக **பன்னிரண்டு மாத காலத்திற்குள்**, **மொத்தம் 30 நாட்கள் மட்டுமே** தங்க வைக்க இயலும். உங்கள் விருந்தினர் தொடர்ச்சியாக 30 நாட்கள் தங்கினாலும் அல்லது, விட்டு விட்டுத் தங்கினாலும், இரண்டிலும் மொத்தமாக 30 நாட்கள் கணக்கிடப்படும். ஒரு விருந்தினர் உங்களுடன் **மொத்தமாக 30 நாட்களுக்கு மேல்** தங்கினால், உங்கள் RGI மானியத்தை நீங்கள் இழக்க நேரிடும்.

## வீட்டை காலி செய்தல்

நீங்கள் வீட்டை காலி செய்யத் தயாராக இருக்கும்போது, உங்கள் இடம்பெயர்வு திட்டத்திற்கு **60 நாட்கள் முன்பாகவே (முழுமையாக இரண்டு மாதங்கள்)** எழுத்துப்பூர்வமாக முன்னறிவிப்பு வழங்க வேண்டும். வெளியேறும் திகதி மாதத்தின் கடைசி நாளாக இருக்க வேண்டும். உங்கள் கையொப்பமிடப்பட்ட வெளியேறுதலுக்கான அறிவிப்பை உங்கள் **மூத்தோர் சேவைகள் ஒருங்கிணைப்பாளர் (SSC)**க்கு சமர்ப்பிக்கவும்.

### சாவிகளும் ஃபாப்களும்

வீட்டை காலி செய்ய முன்பு, பின்வரும் அனைத்தையும் நீனகள் திருப்பி அளிக்க வேண்டும்:

- வீட்டுக்கான சாவிகள்
- அஞ்சல் பெட்டிக்கான சாவிகள்
- சாவி ஃபாப்கள்
- வாகனத் தரிப்பிடச் சாவிகள்/ஃபாப்கள்
- வாகனத் தரிப்பு ஸ்டிக்கர்கள்



வெளியேறுவதற்கு முன்பு, இவற்றை உங்கள் **மூத்தோர் சேவைகள் ஒருங்கிணைப்பாளரிடம் (SSC)** கொடுக்கவும்.

# உங்கள் **சமூகம்**

## சமூகம் பற்றிய தகவல்கள்

உங்கள் கட்டிடம் மற்றும் சமூகத் திட்டங்கள் பற்றிய பயனுள்ள தகவல்களை எங்கள் இணையத்தளத்தில் உள்ள ‘கட்டிடத்தின் விவரங்கள்’ எனும் பக்கத்தில் பின்வரும் இணைப்பில் காணலாம். **TorontoSeniorsHousing.ca/building-profiles/**

உங்களின் வரவேற்புத் தொகுப்பில் ‘கட்டிடத்தின் சுயவிவரத் தகவல்கள் பக்கத்தையும் நீங்கள் பெறுவீர்கள்.

உங்கள் கட்டிடத்தில் நடைபெறும் நிகழ்வுகள் மற்றும் அதில் எவ்வாறு பங்கேற்பது என்பதைப் பற்றி மேலும் தெரிந்து கொள்வதற்கு, உங்கள் ‘சமூகத்திற்கான சேவைகள் ஒருங்கிணைப்பாளரை’ (CSC) தொடர்பு கொள்ளவும். உங்கள் கட்டிடத்தில் உள்ள அறிவிப்புப் பலகைகளையும் நீங்கள் பார்க்கலாம். அறிவிப்புப் பலகை 2 இல் நிகழ்வுகளுக்கான நாட்காட்டி உள்ளது, இது ஒவ்வொரு மூன்று (3) மாதங்களுக்கும் ஒரு முறை புதுப்பிக்கப்படுகிறது.

## சீனியர்ஸ் ஸ்பீக் – உங்கள் குடியிருப்போரின் செய்திமடல்

சீனியர்ஸ் ஸ்பீக் என்பது எங்கள் குடியிருப்போரின் செய்திமடல் ஆகும். இது ஒவ்வொரு மூன்று (3) மாதங்களுக்கு ஒருமுறை வெளியிடப்படுகிறது. நீங்கள் பிரதிகளை இவ்விடங்களில் காணலாம்:

- உங்கள் கட்டிடத்தில் உள்ள அஞ்சல் பெட்டிகளுக்கு அருகில்
- ஆன்லைனில் **TorontoSeniorsHousing.ca/seniors-speak/** எனும் இணைப்பில்

ஒவ்வொரு இதழின் உள்ளேயும், டொராண்டோ சீனியர்ஸ் ஹவுசிங் கட்டிடங்களில் வசிக்கும் குடியிருப்போர்கள் பற்றிய ஊக்கமளிக்கும் கதைகளை நீங்கள் காண்பீர்கள். ஒரு நிறுவனமாக நாங்கள் என்ன செய்து வருகிறோம் என்பதையும், அத்துடன் குடியிருப்பாளர்கள் கோரிய குறிப்புகள், சமையல் குறிப்புகள், புகைப்படங்கள் மற்றும் பலவற்றையும் இதில் நீங்கள் வாசிக்க இயலும்.

உங்கள் கதையைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறீர்களா, உள்ளடக்கம் பற்றிய ஆலோசனைகளின் அல்லது நிகழ்வுகளின் புகைப்படங்களைப் பகிர விரும்புகிறீர்களா? தயவுசெய்து எங்களுக்கு மின்னஞ்சல் அனுப்பவும் **SeniorsSpeak@TorontoSeniorsHousing.ca**.

# கூட்டம் நிகழும் திகதிகள்

டொராண்டோ சீனியர்ஸ் ஹவுஸிங் சபை மற்றும் குழுக் கூட்டங்களை ஆன்லைனில் பார்ப்பதற்கு அனைவரும் வரவேற்கப்படுகிறார்கள். கூட்டங்கள் எங்கள் YouTube பக்கத்தில் நேரடியாக ஒளிபரப்பப்படுகின்றன. பதிவுகளை நீங்கள் பின்னரும் **bit.ly/3epf8XB** இல் பார்வையிடலாம

ஒவ்வொரு கூட்டத்துக்கும் **ஏழு (7) காலண்டர் நாட்களுக்கு** முன்பே, கூட்டத்தின் செயல்திட்டமும் தொடர்புடைய ஆவணங்களும் எங்கள் இணையத்தளத்தில் கிடைக்கும். இந்தக் கூட்டங்களில் பேச அனுமதி கேட்கும் (இதை 'பிரதிநிதித்துவம்' என்று கூறுவர்) வாய்ப்பு குடியிருப்போர்களுக்கும் உள்ளது. இந்தக் கூட்டங்கள் பற்றியும், எவ்வாறு பிரதிநிதித்துவப்படுத்துவது என்பது பற்றியும் மேலும் தெரிந்து கொள்வதற்கு, பார்வையிடவும் **TorontoSeniorsHousing.ca/board-of-directors/**





# உங்கள் கட்டிடத்தில் உள்ள அறிவிப்புப் பலகைகள்

அறிவிப்பு பலகைகள் தகவல்களை பெறுவதற்கான சிறந்த இடங்களாகும். சுவரொட்டிகளின் அடிப்பகுதியில் ஓர் ஏழு இலக்க எண் (உ.ம்., 03-24-123) உள்ளது. இதைப் பயன்படுத்தி நீங்கள் மொழிபெயர்க்கப்பட்ட பதிப்பை **குடியிருப்போர் ஆதரவு சேவை மையம்** அல்லது பணியாளர்களிடமிருந்து எளிதாக கோரலாம். ஒவ்வொரு கட்டிடத்திலும் ஐந்து முக்கிய அறிவிப்புப் பலகைகள் உள்ளன.

## அறிவிப்புப் பலகை 1:

**பூட்டப்பட்டிருக்கும், கண்ணாடியால் மூடியதாகவும், பெரும்பாலும் வரவேற்பு அறையில் இருக்கும்**

- நிறுவன அறிவிப்புகள், அவசரத் தகவல்கள் மற்றும் தீப் பாதுகாப்பு குறிப்பு தகவல்கள் போன்றவை

## அறிவிப்புப் பலகை 2:

**பூட்டப்பட்டிருக்கும், கண்ணாடியால் மூடியதாகவும், பெரும்பாலும் சமூக அறைக்கு அருகாமையில் இருக்கும்**

- நிறுவன அறிவிப்புகள், மொழிபெயர்ப்பு தொடர்பான தகவல்கள், TSHC வாரியம் மற்றும் குழு கூட்டங்கள், மற்றும் உங்கள் கட்டிடத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகள் மற்றும் செயல்பாடுகளுக்கான நாட்காட்டி (மூன்று (3) மாதங்களுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்படுகிறது)

## நீல நிறப் பலகை:

**நீல நிறம், பூட்டப்பட்டிருக்கும், கண்ணாடியால் மூடியதாகவும், பெரும்பாலும் வரவேற்பு அறைக்கு அருகில் இருக்கும்**

- உங்கள் கட்டிட ஊழியர்களின் தொடர்புத் தகவல்கள், சுத்தம் செய்யும் நேர அட்டவணை, கட்டுமான அறிவிப்புகள், கோடை காலத்தில் குளிர்ச்சியாக இருக்க அருகிலுள்ள இடங்கள் பற்றிய தகவல்கள் மற்றும் பல
- டொராண்டோ நகரின் RentSafeTO அடுக்குமாடி குடியிருப்பு கட்டிட தரநிலைகள் திட்டத்திற்கு நீல நிறப் பலகை தேவைப்படுகிறது

## சமூகப் பலகை 1:

**பூட்டப்பட்டிருக்கும், கண்ணாடியால் மூடியதாகவும், பொதுவாக சமூக அறைக்கு அருகாமையில் இருக்கும்**

- சமூக நிகழ்வுகளுக்கான சுவரொட்டிகள் போன்ற தகவல்களை வெளியிட விரும்பும் குடியிருப்போர், **Communities@TorontoSeniorsHousing.ca-**க்கு மின்னஞ்சல் அனுப்பலாம்
- ஊழியர்கள் சுவரொட்டிகளை வைப்பார்கள் - முதலில் வருபவர்களுக்கே முன்னுரிமை

## சமூகப் பலகை 2:

**திறந்த கார்க் பலகை (கண்ணாடி இல்லை), கட்டிடத்தின் பல்வேறு பகுதிகளில் அமைந்துள்ளது**

- குடியிருப்போர் மற்றும் சமூக அமைப்புகள், கட்டிடத்தில் அல்லது சமூகத்தில் வரவிருக்கும் நிகழ்வுகள் பற்றிய தகவல்கள் போன்றவற்றை இடுகையிடலாம்

# யாரை, எப்போது தொடர்பு கொள்ள வேண்டும்

## உங்கள் கட்டிட ஊழியர்கள்

உங்கள் கட்டிட ஊழியர்கள் திங்கள் முதல் வெள்ளி வரை, காலை 8:30 மணி முதல் மாலை 4:30 மணி வரை இருப்பார்கள். உங்கள் கட்டிடத்தில் உள்ள நீல நிற அறிவிப்புப் பலகையில் (**நீல நிறப் பலகை**), அவர்களின் தொடர்புத் தகவல்கள் பட்டியலிடப்பட்டுள்ளது.

**மூத்தோர் சேவைகள் ஒருங்கிணைப்பாளர் (SSC):**
இது வாடகை மீளாய்வுகள், படிவங்கள் மற்றும் ஆதரவுச் சேவைகளைக் கண்டறிவதில் (பழுது பார்த்தல் அல்லது பராமரிப்பு போன்றவற்றிற்கு அல்ல) உங்களுக்கு உதவுகிறது.

**பராமரிப்புக் குழு**
உங்கள் வீடு, பொதுவான பகுதிகள், அத்துடன் உங்கள் கட்டிடத்தை சுத்தம் செய்தல் மற்றும் பிற பணிகளுக்குப் பொறுப்பாளராக இருக்கிறார்கள். குழுவில் பின்வருவோர் அடங்குவர்:

- **கட்டிடக் கண்காணிப்பாளர்:** குழுவை வழிநடத்துகிறார், பழுதுபார்ப்பு சேவைகளுக்கு உங்களின் முதல் தொடர்பு நபராக இருக்கிறார்
- **பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு பணியாளர் (CMP):** பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புக்கு உதவுகிறார்
- **சுத்தம் செய்பவர்/பாதுகாவலர்:** பொதுவான பகுதிகளை சுத்தமாகவும் பாதுகாப்பாகவும் வைத்திருக்கிறார்

## உங்கள் பிராந்திய ஊழியர்கள்

- **பிராந்திய செயல்பாட்டு முகாமையாளர் (ROM):** பிராந்திய ஊழியர்களை வழிநடத்துகிறார்
- **சமூகத்திற்கான வீட்டுவசதி மேற்பார்வையாளர் (CHS):** பராமரிப்புக் குழுவை மேற்பார்வையிடுகிறார்
- **குடியிருப்போர் ஈடுபாடு மற்றும் சேவைகள் மேற்பார்வையாளர் (TESS):** SSC-க்கள் உட்பட குடியிருப்போர் ஆதரவு ஊழியர்களை மேற்பார்வையிடுகிறார்

**சமூக சேவைகள் ஒருங்கிணைப்பாளர் (CSC):**
உங்கள் கட்டிடத்திலும் பிராந்தியத்திலும் நிகழ்ச்சித் திட்டங்களையும் செயற்பாடுகளையும் திட்டமிட்டு வழங்க குடியிருப்போருடனும் சமூக கூட்டாளர்களுடனும் இணைந்து செயல்படுகிறார்.

**பிரச்சனைகளைத் தீர்க்கும் குழு:**
நீங்கள் கட்டிட ஊழியர்களை அல்லது குடியிருப்போர் ஆதரவு சேவை மையத்தை அணுக முடியவில்லை என்றால், அல்லது உங்கள் சேவை அல்லது பராமரிப்புக் கோரிக்கையைப் பற்றிய போதிய தகவல்கள் கிடைக்கவில்லை என்றால், உங்கள் புகாரைப் பதிவு செய்ய, **பிரச்சனைகளைத் தீர்க்கும் குழுவை 416-945-0888** என்ற எண்ணில் அல்லது **Solutions@TorontoSeniorsHousing.ca** என்ற மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளலாம்.

## வாரத்தின் ஏழு நாட்களிலும், ஒரு நாளில் 24 மணித்தியாலங்களும் ஆதரவு சேவையைப் பெறலாம்

**குடியிருப்போர் ஆதரவு சேவை மையம்:** 416-945-0800
Support@TorontoSeniorsHousing.ca

**இவற்றிற்கு தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும் அல்லது மின்னஞ்சல் செய்யவும்:**

- பழுதுபார்ப்புகள் அல்லது பராமரிப்பு (பகல் அல்லது இரவு)
- உங்கள் வாடகை அல்லது குத்தகை பற்றிய கேள்விகள்
- வேறொரு வடிவத்தில் அல்லது மொழியில் உள்ள ஆவணங்கள்
- புகார் அளித்தல்

**அவசர பழுதுபார்ப்புகளுக்கு - தயவுசெய்து தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும், மின்னஞ்சல் அனுப்ப வேண்டாம்.** தொலைபேசி ஆதரவு சேவை பல மொழிகளில் கிடைக்கிறது.

**சமூகப் பாதுகாப்பு பிரிவு (CSU):** 416-921-2323

**புகாரளிக்கத் தொடர்பு கொள்ளவும்:**

- பாதுகாப்புச் சிக்கல்கள்
- சத்தம் பற்றிய புகார்கள்
- சுற்றித் திரிதல் அல்லது அத்துமீறி நுழைதல்
- டொராண்டோ சீனியர்ஸ் ஹவுசிங் இடத்தில் வாகனத் தரிப்பு விதிமுறைகள் மீறப்படுதல்

**ஆதரவு சேவை பல மொழிகளில் கிடைக்கிறது.**

**அவசரநிலைக்கு, எப்போதும் 911 ஐ அழைக்கவும்.**

# அவசரநிலை மற்றும் அவசரமல்லாத நிலையில் சமூக தொடர்புகள்

**911** - [tps.ca/contact/9-1-1-emergency/](tps.ca/contact/9-1-1-emergency/)

தீவிபத்து, நடைபெற்று கொண்டிருக்கும் குற்றச் செயல், அல்லது உயிருக்கு ஆபத்தான அவசர நிலை போன்ற சந்தர்ப்பங்களில் தொடர்பு கொள்ளவும்

அவசரமில்லாத காவல்துறை உதவிக்கு டொராண்டோ காவல் சேவைகள் அவசரமில்லாத நேரங்களுக்கான தொலைபேசி எண்: **416-808-2222**

**211** - [211ontario.ca/contact](211ontario.ca/contact)

சமூகம், சமூக அமைப்பு, அரசுத் துறை, அவசரமில்லாத சுகாதார சேவைகள் ஆகியவற்றுடன் தொடர்பு கொள்ள தேவையான தகவலும் உதவியும் — 150க்கும் மேற்பட்ட மொழிகளில் இந்த சேவை வழங்கப்படுகிறது

**311** - [Toronto.ca/311](Toronto.ca/311)

நகரத்தில் உள்ள சேவைகள் மற்றும் திட்டங்கள் பற்றிய தகவல்கள் - 180+ மொழிகளில் சேவை

**411** - [Canada411.ca](Canada411.ca)

உள்ளூர் தொடர்பு தகவல் உதவி சேவை

**711** - [crtc.gc.ca/eng/phone/acces/mrsrt.htm](crtc.gc.ca/eng/phone/acces/mrsrt.htm)

செய்தி ரிலே சேவை (MRS) - கேட்கும் திறன் அல்லது பேச்சு குறைபாடு உள்ளவர்கள், உரைத் தொலைபேசி (TTY) அல்லது பிற சாதனங்களைக் கொண்டுள்ள தொலைபேசி அமைப்பைப் பயன்படுத்தி, அத்தகைய குறைபாடுகள் உள்ளவர்களுடன் அல்லது இல்லாதவர்களுடன் தொடர்பு கொள்ள உதவுகிறது

**811** - [health811.ontario.ca](health811.ontario.ca)

அவசரமில்லாத சுகாதார ஆலோசனை, முன்னர் Telehealth என்று அறியப்பட்டது

**ஜூன் 2025** அன்று வெளியிடப்பட்டது